யாழ்ப்பாணம்

# புளியங்குளம் தாக்குதலில் புலிகள் பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றினர்!

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 29 இதழ் 97
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12 – 5 – 1995

(யாழ்ப்பாணம்)
காட்டுப் புளியங்குளம் இராணுவ - பொலிஸ் முகாம்மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் காலைமேற்கொண்ட மின்னல்வேக அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ரி 81 எல். எம். ஜி. - 01
★ ஏ. கே. எல்.எம்.ஜி. - 02
★ ஆர். பி. ஜி. - 01
★ 60 மில்லி மீற்றர் மோட்டர் - 01
★ 40 மில்லி மீற்றர் பிஸ்டல்கள் - 02
★ ரி 56 ஒன்று ரக துப்

(6ம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தில் தொண்டர்களை சேர்க்க அரசு முடிவு

[கொழும்பு]
வடக்கு-கிழகக்கு பகுதிகளில் தொடரும் யுத்தத்தை முன்னிட்டு இராணுவப் படைக்கு மேலும் இராணுவத் தொண்டர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக இராணுவ தலைமையகம் நேற்று தெரிவித்தது.

இப்பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 17ம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நாடு முழுவதும் நடைபெறுமென்று மேலும்தெரிவிக்கப்பட்டது. [க-இ]

# வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை தொடர ஆயுதங்கள் வழங்க வெளிநாடுகள் மறுப்பு!

(கொழும்பு)
**இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தை நடத்துவதற்கு ஆயுதங்களை வழங்க முடியாது. ஆனல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்பாதுகாப்பு ஆயுதங்களை மாத்திரம் தரலாம். இவ்வாறு பல வெளிநாடுகள் இலங்கை அரசுக்குத் தெரிவித்துள்ளன'**

வடக்கு-கிழக்கு யுத்தத்தை தொடர்ந்து நடதகுவதறகு ஆயுதங்கள் உற்பத்திசெய்யும் நாடுகளிடம் ஆயுதம் வழங்குமாறு சிறிலங்கா அரசு விடுத்த வேண்டுகோளுக்கு அந்நாடுகள் சாதகமான பதிலெதுவும் அளிக்கவில்லை என்று 'ராவய' தெரிவித்துள்ளது.

யுத்தம் நடத்துவதற்கு ஆயுதம் வழங்க முடியாது. பாதுகாப்புக்காக ஆயுதங்கள் தரலாம் என்றும் அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பெருந்தொகையான பணத்திற்கு மேலும்பல நாடுகளிடமிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவும் நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிடமிருந்து ஆயுதஉதவி மட்டுமல்ல இராணுவ நியுணத்துவம் மற்றும் ஆலோசனைகள் பெறவும், படையினருக்கான பயிற்சிகளைப் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரு

(6-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸாரால் கைதாகும் தமிழர் விரைவில் விசாரிக்கப்படுவர்

[கொழும்பு]
பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரால் தெற்கில் கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் துரிதமாக விசாரணை செய்யப்பட்டு அப்பாவிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென தாம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதிபட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய நிலையில் சிங்களப் பத்திரிகைகள் பொறுப்புடன் இயங்கவேண்டும்

### லூசியன் ராஜ கருணநாயக்கா

(கொழும்பு)
''கொழும்பில வெளியாகும் சிங்களப் பத்திரிகைகள் தற்போதைய நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு பொறுப்புடன் செயல்பட வேண்டும்''.

இவ்வாறு சுதந்திரச்செய்தி ஊடக அமைப்பின் அமைப்பாளர் லூசியன் ராஜகருணநாயக்கா பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் தெரிவிததார். அவர் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது;

பல சிங்களப் பத்திரிகைகள் தவருன, குழப்பமான, பயங்கரமான செய்திகளை தமது பத்திரிகைகளின் முதல்பக்கத்தில் வெளியிடுவதற்கு தற்போதைய நாட்டு சூழ்நிலையே காரணமாகிவிட்டது.

இதே நேரம் வடபகுதியில் உள்ள நிலைமைகளை ஒளிவு

(6 -ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை தெரிவு செய்வதில் நிவாரணம் வழங்க ஜனதிபதி உறுதி

(கொழும்பு)
யாழ் பல்கலைக் கழகத்தில் வெற்றிடங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்யும்போது யாழ். மாவட்டத்தில் அடுத்து ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 9ம் திகதி தம்மைச் சந்தித்த தமிழ்ப் பிரமுகர்கள் குழுவிடம் மேற்கண்டவாறு ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனதிபதி இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

யுத்தத்தினல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்கலைக்

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கு கொழும்பிலிருந்து மருந்து வகை எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
இவ்வாண்டுக்கான யாழ். போதன வைத்தியசாலைக்குரிய இரண்டாம் காலாண்டு மருந்துவகைகள் கொழும்பில இருந்து எடுத்து வருவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மருந்துவகைகளைக் கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு வைத்தியசாலை நிர்வாக அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார்.

இந்த மருத்துவகைகள் சீ-டான்சர் கப்பலில் எடுத்து வரப்படும் என்று வைத்திய சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 170-சி-இ

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் 2வது நாளாக உண்ணவிரதம்

(யாழ்ப்பாணம்)
யாழ். பலகலைக் கழக மருத்துவபீட மாணவர்களின் உண்ணவிரத போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற உண்ணவிரதத்தில் சகல பீடங்களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

உண்ணவிரதம் அனுஷ்டிப்பதற்கான பல்கலைகழகமைதானத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட பந்தலை சுற்றி சுலோகஅட்டைகளும் பாதகைகளும் கட்டப்பட்டிருந்தன.

தமது கோரிக்கைக்கு சாதகமான முடிவு வரும் வரை தமது உண்ணவிரத போராட்டம் தொடரும் என்று மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்தனர். இ-170

## 250 படையினர் கொல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
அரசுப் படைகளுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் மூன்ருவது ஈழப்போர் ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் 250 க்கும் மேற்பட்ட படையினர் விடுதலைப் புலிகள் தாக்குதலினல் கொல்லப்பட்டனர். -க-இ

## ஆனையிறவுக்கு தெற்கே புலிகள் தாக்குதல்

[கொழும்பு]
ஆனையிறவுக்குத் தெற்கே பொத்துமண்கேணி என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் இரவு மேற்படி காவலரண் மீது விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டதாகவும், ஆனல் இராணுவத்தினர் இத்தாக்குதலை முறியடித்து விட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. -வி-இ

## பீரங்கி மூலம் தாக்குதல்

(கொழும்பு)
நீண்டதூரம் சென்று தாக்கும் பீரங்கிகள் மூலம் ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று விடுதலைப் புலிகளின் இலக்குகளை நோக்கி இராணுவம் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் தொடர்பான விபரங்கள் பற்றி தெரிவிக்கப்படவில்லை. இரி

## வரி விளம்பரம்


வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1464)


# நாடாளுமன்றத்துக்கு கூடிய அதிகாரம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

தற்போது நாட்டிலுள்ள தேர்தல் முறையை மாற்றியும் ஜனாதிபதியை மக்களால் தெரிவு செய்யும் முறையை ஒழித்தும், நாடாளுமன்றத்திற்கு கூடிய அதிகாரம் வழங்கவும் தற்போதைய அரசு தீர்மானித்துவருகிறது.

இதனை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை தெரிவு செய்யும் தற்போதையமுறை சிறுபான்மை மக்களுக்கும் ஏற்றதாகவுள்ளது: அவர்கள் தங்கள் குரலை எழுப்பவும்போட்டியிடவும் வாய்ப்புண்டு.

ஆனால் நாடாளுமன்றத்திற்கே அந்த அதிகாரத்தை வழங்கும் பட்சத்தில் கட்சிகளதும் 'சிறுபான்மையினதும் செல்வாக்கு வலுவாக குறைந்துவிடும்என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாற்றம் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இக்கட்சியுடன் இணைந்து மற்றும் சில சிறுபான்மை கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

கே-ரி

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் - 1995 தொடர்பாக பாடசாலை மாணவ முதல்வர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஏற்பாடாகியுள்ளது. தெல்லிப்பளை, வேலணை-ஊர்காவற்றுறை கோட்டங்களுக்கான கலந்துரையாடல் முறையே யா/மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மு. ப. 9 மணிக்கும் நாவலர் மண்டபத்தில் ந ப. 12 மணிக்கும் இடம்பெறும். -ர

## பிரிவுபசார விழா

(கொழும்டத்துறை)

தென்மராட்சி பிரதேச சபை செயலகத்தில் கிராமிய அபிவிருத்தி அலுவலராகப் பல வருடங்கள் கடமை புரிந்து தற்போது மன்னார் மடுப் பிரதேச சபை செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. இராஜஇராஜேஸ்வரனுக்கு செயலக ஊழியர்களால் அண்மையில் ஓர் பிரிவுபசார விழா நடாத்தப்பட்டது. -54

## புலிகள் பகுதிக்கு செல்ல தடையாம்

(வவுனியா)

வவுனியாவில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்கத் திணைக்களங்களில் கடமை புரியும் திணைக்களத்தலைவர்கள், புலிப் படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது

இதற்கான உத்தரவை வவுனியா இராணுவ தலைமையகம் வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளது

ர-சி

# அரசின் நம்பிக்கையீனமே மீண்டும் போரைத் தொடரக் காரணம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக அரசு நம்பிக்கையீனத்துடன் நோக்கியதாலே மீண்டும் யுத்தம் வெடித்தது என்று சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாரப்பத்திரிகையொன்றில் எழுதியுள்ள கட்டுரையொன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசாங்கம் ஆரம்பத்தில் சமாதான வழிமுறைக்கு நல்லதும் முறையானதுமான அணுகு முறையைக் கையாண்டிருந்தாலும் இடைநடுவில் தனது உத்தியோக பூர்வ. உத்தியோகபூர்வமற்ற ஆலோசனைச் சபைகளின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டது.

இதனால் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு மிடையே நம்பிக்கை இழப்பு பாரிய அளவில் தோன்றியது. அந்நம்பிக்கை இழப்பினால் ஏற்பட்ட உடைவின் தொடர்ச்சியாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் ஜனாதிபதிஊடாக தமது நோக்கங்களை தற்போது அடையவே முயற்சிக்கின்றனர்.

இராணுவ உயர் அதிகாரிகள் யுத்தத்தையே விரும்புகிறார்கள் ஏனெனில் அது அவர்களின் தேவை என்பதனாலாகும்.

யுத்தம் தொடர்ந்து நடைபெற்றால் மட்டுமே அவர்களால் சமூகத்திலுள்ள அதிகாரத்துவ கட்டமைப்பில் செல்வாக்கைப் பெறவும் பணம் சம்பாதிக்கவும் முடியும்.

அரசாங்க ஆலோசகர்களின் பயனற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க விரோத உணர்வு காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத தரப்பிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைத்த சந்தர்ப்பம் துரதிர்ஷ்டவசமாக இழக்கப்பட்டுக் கொண்டு செல்கிறது.

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்திய தாக்குதலுக்கு முன்பு புலிகள் முன்வைத்த நிரந்தர யுத்த நிறுத்தம் பற்றிக் கலந்துரையாட அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–05-12

வெள்ளி இரவு

08-02 கலைமஞ்சரி- நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுகவாவது பொது நிர்வாக சேவையினரின் பொறியியல் துணை வெளியீடான ''நிர்மாணி'' முதல் சஞ்சிகையும், நாற்று சஞ்சிகையின் 2வது இதழும், அறிமுகத்தை அடுதது சிறுகதை- ஆனந்தி எழுதிய ''அதுக்குப் பிறகு'' சிறுகதையைத்தொடர்ந்து கவிதை- கலைக்கோன் எழுதிய ''தன்னாட்சி உரிமைக்காய்''

08-25 கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய 'லெப். கேணல். நவம'

08 30 செய்திகள்

08-40 அரசியல் அரங்கம்- வே. பாலகுமாரன் எழுதிய ''இன்னொரு மைலாய் படுகொலை

08 50 ஏர்முனை- ''வாருங்கள் வன்னிக்கு'' குறுநாடகம்

1995–05–13

சனி காலை

07-02 மாவீரவணக்கம்

07-15 நீங்கள் கேட்டவை

07-30 செய்திகள்

07-35 பத்திரிகைச் செய்திகள்

07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–05–12

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்

05-02 எழுச்சிகீதம்

05-10 புதியவை

05-15 கணநேரக் காவியங்கள்

05-30 மண்ணின் குரல

05-40 நேயர் கடிதங்கள்

05-45 வெற்றிச்சுவடுகள்

06-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்

06-02 தொடர் நாடகம்- பொமபுளை பார்க்கப் போறம்- அங்கம் 1

06-15 விளையாட்டுச் செய்திகள்

06-20 என்தெரிவு

06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# 'எயர்லங்கா' சீரமைப்புக்கு இருபது யோசனைகள்

(கொழும்பு)

''எயர் லங்கா'' விமான சேவையை மறுசீரமைப்பது தொடர்பாகவும் தனியார் மயப்படுத்துவது தொடர்பாகவும் வெளிநாட்டு கம்பனிகளிடமிருந்து சுமார் 20யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரசாங்கத்துறை தொழில் நிறுவன மறுசீரமைப்புஆணைக் குழுவின் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் இதனை தெரிவித்தார்

'எயர்லங்கா' நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான யோசனைகள் யூன் மாதம் 15ம்திகதி வரை வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

எயர்லங்கா நிறுவனத்தை ஒரு பூரண சர்வதேச நிறுவனம் என்ற நிலைக்கு கொண்டுவர பொருத்தமான பங்காளி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதும் அந்த நிறுவனத்தை மறுசீரமைபபதற்கான ஒரு வருட வேலைத்திட்டம் ஆரம்பமாகும் என்றும் மேலும் அவர் கூறினார். கே-ரி

# கம்பன் விழாவின் 4-ம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன்கழக 15வது ஆண்டு நிறைவுக் கம்பன் விழாவின் 4ம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை 9-30 மணிக்கும் மாலை 4-30மணிக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் நடைபெறும்.

காலை நிகழ்ச்சியில் தலைமையுரையை ஒய்வு பெற்ற உப அதிபர் திரு. க. வை. தனேஸ்வரனும் [தொடக்கவுரையை கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையும் வாழ்த்துரையை திரு க. திருநாவுக்கரசுவும் நிழழ்த்துவர்.

இதைத் தொடர்ந்து' கழலும் சொற் போர், திரு. இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை 4 30 மணிக்கு ஆரம்பமாகும். தலைமையுரையை கலாநிதி க. குணராசாவும் தொடக்கவுரையை திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனும் வாழ்த்துரையை வைத்திய கலாநிதி க முருகானந்தனும் வைத்திய கலாநிதி வி. ஸ்ரீகாந்தாவும் வழங்குவர்

இதைத் தொடர்ந்து மாலை நேர சிறப்பு நிகழச்சிகளாக 'கம்பன இசையமுது'வும் 'இலங்கையின் தலைமைப் பிரஜையெனும் தகுதி வழங்கப்படவேண்டியது இராவணனுக்கே கும்பகர்ணனுக்கே, விபீடணுக்கேஇந்திரசித்தனுக்கே. எனும் பொருளில் இலக்கிய ஆணைக்குழுவும் இடம்பெறும். ர-சி

## கைதடி ச.ச.நிலைய39வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி ச, ச. நிலையத்தின் 39 வது ஆண்டு விழாவையொட்டி எதிர் வரும் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலைய மைதானத்தில் மெய்வல்லுநர் போட்டி நடை பெறவுள்ளது.

நிலைய தலைவர் திரு. க. இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதிக்கல விப்பணிப்பாளர் . நா சத்தியநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறா.

இளைஞர் சேவை அதிகாரி செ. கார்த்திக், சாவகச்சேரி பிரதேசசபை உபபணிமனை பொறுப்பாளர் இ. து. சிவராசா, தென். மே. ப. நோ. கூ. ச. தலைவர் பிரேமகுமார். கிராமசேவையாளர் யோசப் ரட்ணராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ அதிதிகளாக தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வனும் கைதடி வட்டஅவைப்பொறுப்பாளர் வரதனும், வலிகாமம் கோட்ட சொத்துக்கள் கண்காணிப்பு பிரிவு பொறுப்பாளர் நா. மதியழகனும் கலந்து கொள்கின்றனர். -ரி

# 42லட்ச ரூபா கடத்தமுற்பட்ட இலங்கை தம்பதி சென்னையில் கைது

(சென்னை)

42 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அந்நிய கரன்ஸிகள் மற்றும் ட்ரவலர்ஸ்செக்குகள் போன்றவற்றை கடத்த முற்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஒரு கணவனும் மனைவியும் சென்னை விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்திலிருந்து இலங்கைக்கு பயணமாக இருந்த இந்தப் பெண்ணின் பெட்டியை சுங்கத்துறையினர் சோதனையிட்டபோது சேலைகளுக்கு இடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த கடத்தல் பணமும். செக்குகளும் கைப்பறறப்பட்டன என்று சுங்கத்துறையினர் தெரிவித்தனர்.

இதுதொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ரி-இ

# கடல் அட்டைதொழில் ஈடுபட்டவர்கள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

ஆழ்கடலுக்குச் சென்று கடல் அட்டைத் தொழிலில் ஈடுபட்டுவந்த என்போன்ற பல தொழிலாளர்கள் மீண்டும் எமது தொழிலைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியாதுள்ளது' இதனால் இத்தொழிலில ஈடுபட்டுவந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த கடல அட்டை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுவந்த குடும்பஸ்தர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:

அண்மையில் ஏற்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து கடல்வலையச் சட்டம் ஓரளவு நீக்கப்பட்டிருந்தது. இதனால் எமது தொழிலை மீண்டும் விஸ்தரித்து வந்தோம்.

இதனல் எமது கஸ்டங்கள் ஓரளவு நீங்கியிருந்தது

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து அரசானது மீண்டும் கடல்வலயத் தடைச்சட்டத்தை முழுமையாக அமுல் படுத்தியுள்ளது அத்துடன் எமது கடற் பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படையினர் ரோந்து நடவடிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையால் நாம் கடல் பிராந்தியத்தில் இறங்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எமது தொழிலை மீண்டும் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளது [162]

## காற்றடிக்கும் பம்ப்

(கொழும்புத்துறை)

யாழ். மிட்ரவுண்ட் ரேட்டரக்ட் கழகம் சைக்கிள் பயணிகளின் வசதிகருதி வல்லை வெளி முனியப்பர் கோவிலடியில் காற்றடிக்கும் 'பம்ப்' ஒன்றை நிரந்தரமாக நிறுவியுள்ளனர். 154

# நாட்டில் மீண்டும் யுத்த சூழல் ஆரம்பம்!

(கொழும்பு)

அரசு - புலிகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைவிடப்பட்டதை தொடர்ந்து கடந்த 17 வருட ஐ. தே. க. ஆட்சியில் தமிழ் மக்களடைந்த அகே வேதனைக்கும், துன்பத்திற்கும் முகம்கொடுக்க வேண்டியவர்களாக வடக்கு கிழக்கு மக்கள் மாற்றப்பட்டுள்ளனர் என்று கொழும்பு பத்திரிகையொன்றில் வெளியான கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பொருளாதாரத் தடை, பொருட்களுக்கான தட்டுப்பாடு, விலைவாசியேற்றம், ஷெல்லடி அகதி வாழ்க்கை முதலானவற்றிற்கு மீண்டும் முகம்கொடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலை ஐ தே க ஆட்சியில் மக்களடைந்த வேதனை மிகுந்த சூழ்நிலைக்கே மீண்டும் இட்டுச்சென்றுள்ளது.

வடக்கில் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ள பொருளாதாரத் தடை, கிளாலி ஊடான போக்குவரத்து தடை. மீன்பிடித்தடை முதலானவை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்களே!

கிழக்கிலும் உக்கிரமான மோதல் சம்பவங்கள், பொருளாதாரத் தடை, தேடுதல் நடவடிக்கைகள், கைதுகள் யாவும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளன. இதனால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருப்பது அப்பாவிப் பொதுமக்களேயன்றி வேறு யாருமல்ல.

வடக்கிலும் கிழக்கிலும் அமைதியை ஏற்படுதுவதன் மூலம் முழு நாட்டிலுமே சமாதானத்தை கொண்டுவருவதே தமது நோக்கமெனக் கூறிய பொ. ஐ. மு. அரசு தற்போது தனது நிலையிலிருந்து நழுவிச் செல்லும நோக்கினையே கடைப்பிடித்து வருகிறது.

மீண்டும் போர் வெடித்த மறுதினமே பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடையைக் கொண்டுவந்ததன் மூலம் இது நிரூபணமாகிறது.

ஆரம்பத்தில் சமாதான முயற்சிகளை எடுத்து வந்த பொ. ஐ. மு. அரசு இடையிடையே யுத்தத்திற்கு தாம் சளைத்தவர்களல்ல என்ற வியூகத்தை அடிக்கடி மேற்கோள் காட்டியே வந்துள்ளது, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த காமினி திஸநாயக்கா கொலை செய்யப்பட்டதிலிருந்து இக்கருத்தினை வெளிப்படுத்திவந்துள்ளார்.

அரசியல் பேச்சுவார்த்தை மூலம் அமைதிக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுவதே அரசின் உறுதியான நோக்கமெனில் இவ்வாறான பேச்சுக்கள் எழுவதற்கே இடமிருக்காது என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரி)

## மணிவாக்கு

சிந்திக்காதபடி படித்தால் மனதிற்குக் குழப்பம் தரும்; படியாதபடி சிந்தித்தால் மனதின் சமநிலையைக் கெடுத்துவிடும்.

— சீன பழமொழி

# விமான ஓட்டிகள் மறுத்தபோதும் பலாலி செல்ல பணிக்கப்பட்டது

(கொழும்பு)

ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகிய இரண்டாவது 'அவ்ரோ' விமானத்தை பலாலிக்கு கொண்டு செல்வதற்கு விமான ஓட்டிகளும் படை அதிகாரிகளும் மறுப்புத் தெரிவித்திருந்தும்' அதை அசட்டை செய்து பலாலிக்கு செல்லுமாறு ஒரு வியானப் படை அதிகாரி உத்தரவிட்டிருந்தார் என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை விமான ஒட்டியான விங்கமாண்டர் பத்திரன ரத்மலானை விமான நிலையத்தில் இருந்து இந்த அவ்ரோ விமானம் பலாலிக்கு புறப்படுவதற்கு முன் தனது சகோதரியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தன்னை பலாலிக்கு செல்லுமாறு உத்தரவிட்டுள்ளார்கள் என்றும் தான் மீண்டும் உயிருடன் வருவேனோ தெரியாது என்றும் அறிவித்திருந்தராம்.

மற்ற விமான ஓட்டியான பிரியங்கா அதிகாரம் ரத்மலானையில் இருந்து சென்ற அவ்ரோ அநுராதபுரத்தில் தரித்து நின்றபோது பலாலிக்கு மேலும் பயணத்தை தொடர முடியாது என்று மறுப்புத் தெரிவித்திருந்தார் என்றும் ராவய மேலும் தெரிவித்துள்ளது.

ம-சி-ரி

## நமது நோக்கு

### அங்கேயே அப்படியானல்...?

மாகாணசபை உரிமைகளுக்காக நீதிமன்றம் செல்ல நேரிடும் என வடமேல் மாகாண முதல்வர் மஹிந்தசோமா கூறியுள்ளார்.

அரசியல் யாப்புக்கான பதின்மூன்ருவது திருத்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமைகளையே அரச நடவடிக்கைகள் பாதிக்கின்றன.

இதுபற்றி இணக்கமான தீர்வு ஒன்றைக் காணவே தான் முயற்சி எடுத்து வருவதாகவும் ஆனல் அரசாங்க தரப்பிலிந்து ஆக்கபூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இன்றைய ஜனதிபதி சந்திரிகா அம்மையார் மேல்மாகாண முதல்வராக இருந்தபோது கூறிய கருத்துக்கள் நினைவிருக்கிறதா?

அதிகாரமற்ற பதவியிலேயே தான் அமர்ந்திருப்பதாகக் கூறி, மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டுமெனப் போர்க்கொடி தூக்கினர்.

இன்று- அதே அம்மையார் ஜனதிபதிக் கதிரையில் அமர்ந்துள்ளார்.

அன்று- ஆளும் கட்சியாக இருந்த ஐ. தே. க. வைச் சேர்ந்த வடமேல் மாகாண முதல்வர் தான் இன்று நீதிமன்றம்கூடச் செல்லத் தயங்கமாட்டேன் எனக் குரல் கொடுக்கிருர்.

நாம் கற்கவேண்டிய பாடம் என்ன?

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலுக்காக அமைக்கப்படும் எந்தச் சபையும் பயன் தராது. அதிகாரத்தைக் கையில் வைத்து 'ருசி' கண்டவர்கள் பகிர்ந்தளிக்க முன்வரமாட்டார்கள்.

பெரும்பான்மை இன மக்களுக்கே இந்தக் கதி என்ருல், கிள்ளுக்கீரையாக நினைத்து அடக்கி ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு இந்த அதிகாரப் பரவலாக்கல் எவ்வளவு தூரம் உதவப் போகின்றது?

இரு கை நீட்டி இரந்து கேட்டுப் பெறும் உரிமைகளைக்கூட அனுபவிக்க இடம்தரமாட்டாது ஆளும் வர்க்கம் என்பது தெளிவாகிறது.

அதனல்- மக்கள் தியாகத்தால் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டியதன் அவசியம் தெரிகிறது!

# அரசபடைக்கு ஏற்படும் இழப்பு பெரும் அச்சத்தை தருகிறதாம்

(கொழும்பு)

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் அமுலிலிருந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்து 21 நாட்களுக்குள் 200க்கும் அதிகமான படையினரை விடுதலைப் புலிகள் தாக்கிஅழித்துவிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இதுபற்றி பி. பி ஸி. மேலும் தெரிவிக்கையில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்தபின்பு அரச படையினர் திகில்தரும் அளவில் ஆட்களையும் ஆயுதங்களையும் இழந்துவருகின்றனர்.

போதிய இராணுவ சாதனங்களைக்கொண்டிராத விமானப்படைக்கும் கடற்படைக்கும் மனத் தளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் இரு பாரிய கடற்பீரங்கிக் கப்பல்களையும் இரு விமானங்களையும் அழித்துவிட்டனர். விடுதலைப் புலிகளிடம் தற்போது விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதினல் அரசு தம்மிடம் எஞ்சியிருக்கும் விமானங்களையும் ஹெலிகொப்டர்களையும் பயன்படுததுவதற்கு தயங்குகின்றது.

இதேநேரம் நவீன ஆயுதங்களை வாங்குவதற்காக இராணுவ உயர் அதிகாரிகள் உலக ஆயுதச் சந்தைகளுக்கு பல குழுக்களாகச் சென்றிருப்பதாகவும் பி. பி' ஸி. தெரிவித்தது.

(வி சி ரி)

# மலையகத்தில் புலிகள் ஊடுருவலாம் சுற்றி வளைப்புகள், கைது அதிகரிப்பு

(கொழும்பு)

மூன்ரும் ஈழப்போர் ஆரம்பமானதை அடுத்து மலையகத்திலும் கைது நடவடிக்கை. தேடுதல் வேட்டை. சுற்றி வளைப்புகள் அதிகரித்து வருகிறது.

இப்பகுதிகளில் திடீர் திடீரென செல்லும் பொலிஸார் சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனராம்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையினல் மலையகத் தமிழர்கள் மத்தியில் பதற்றமும் அச்சமும் நிலவி வருகிறது.

இக்கைது நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு முறையிடப்பட்டுள்ள போதிலும் கைதுகள் தொடர்ந்த வண்ணமிருக்கிறது.

மலையகத்தில் கைது செய்யப்படுபவர்களில் பலர் பொலிஸாரினல் கொண்டு செல்லப்படுகிருர்கள் இவ்வாறு கைதானவர்கள் பற்றிய விபரங்கள் எதனையும் பெற முடியாதுள்ளது.

மலையகத்திலும் விடுதலைப் புலிகள் ஊடுருவி விடுவார்கள் என்ற சந்தேகத்தை அடுத்தே மலையகமும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொலிஸாரின் இத்தகைய கைது நடவடிக்கைகளுக்கு மலையகத்திலுள்ள பொது அமைப்புகள் தமது கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இக்கைது நடவடிக்கைகள் தொடர்பாக மலையக மக்கள் முன்னணி தலைவரும் பிரதி அமைச்சருமான திரு. சந்திரசேகரன் கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது: மலையக இளைஞர்கள் மட்டுமல்லாது வட கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களும் கைது செய்யப்படுகின்ருர்கள். இதனைப்பற்றி நான் சட்டமா அதிபருடன் பேசியுள்ளேன்.

குற்ற ஒப்புதல் வாக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## பலதும் பத்தும்

### பயணக் குமட்டல்

கப்பல், விமானம், ரயில் ஆகியவற்றில் போகும் போது... சிலருக்குத் தலைச் சுற்று ஏற்பட்டு... குமட்டலும், வாந்தியும் வரும், இதனையே பயணக் குமட்டல் (Motion sickness) என்பர். இது... அருகில் இருப்போருக்கும் பல சங்கடங்களை விளைவிக்கும். இதற்குச் சிகிச்சை அளிப்பதைவிட தவிர்ப்பதே நல்லதாம்!

ஆனல்... தவிர்ப்பதற்கான குளிகைகள் எடுத்துக் குமட்டலைத் தடுத்தாலும், ஒருவித தூக்க நிலையை உண்டாக்கி விடுமாம்.

தற்போதைய ஆய்வின் படி பயணத்திற்கு முன் சிறியளவு இஞ்சிப்பொடியை எடுத்தால் சுகப் பயணம் தான். என்ன... ஒருமாதிரியாகப் பார்க்கிறீர்கள்? இஞ்சியைத் தின்ற 'அந்தப்' பிராணியின் நினைவு வந்துவிட்டதா?

— மயூரன்

# வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிராக புலிகள் பிரசாரம்

(கொழும்பு)

அரசாங்கம் தாக்குதலை நடாத்திக்கொண்டு, சமாதானத்தை எட்டுவதாக அறிவித்திருப்பதை அடுத்து விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளையினர் இலங்கைக்கு உதவி வழங்கும் வெளிநாடுகள் மத்தியில் தீவிர எதிர்ப்பிரசாரத்தை மேற்கொண்டுவருகிருர்கள் என்று 'சிலுமின' பத்திரிகை

(5-ம் பக்கம்பார்க்க)

## வெள்ளி விருந்து

# சொல் அலங்காரம் மிக்கது கந்தரலங்காரம்!

அலங்காரம் பண்ணுகிறவர்களுக்கு வேண்டிய பொருள்கள் ஆடை. அணி. மாலை முதலியன அல்லவா? நல்ல நறுமணமுள்ள மலர்களைக் கொண்டு அலங்காரம் பண்ணலாம்; ஆனல் அம்மலர்கள் மறுநாள் வாடிவிடும். நல்ல ஆடைகளால் அலங்காரம் பண்ணிப்பார்க்கலாம்; அந்த ஆடையும் நாளடைவில் கிழிந்து விடும்.

பல காலத்துக்கு மறையாத, கிழியாத, வாடாத ஒரு பொருளினலே நெடுங்காலம் உலகத்தில் செலவாணி ஆகக்கூடிய ஒரு பொருளாலே அலங்காரம் பண்ண வேண்டும் என்று விரும்பினர் அருணகிரிநாதர். சொல்லாலேயே அலங்காரம் பண்ணினர்.

கல் எல்லாம் மாணிக்கக் கல் ஆவதில்லை. சொல் எல்லாம் நல்ல சொல் ஆவதில்லை. தூண்போலத் தம்முடைய மனத்திலே இருக்கிற ஆண்டவனைப் பிறரும் பற்றிக் கொண்டு இன்பம் அடைய. அந்த இறைவன்பால் அவர்களுடைய மனங்களும் ஈடுபடச் செய்ய அருணகிரிநாதர் தம்மிடமுள்ள மிகச் சிறந்த பொருளாகிய சொற்களின் குவியலினலே அலங்காரம் பண்ணுகிருர். 100 அழகான பாடல்களுடைய மாலையை முருகப்பெருமானுக்குச் சமர்ப்பிக்கிருர், கந்தரலங்காரம் மூலம்!

— கி. வா. ஜகந்நாதன்

அன்னிய உணவை மறப்போம்
நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்

# அரசின் சமாதானப்பிடி நழுவுகிறது பங்குச் சந்தையில் பாரிய வீழ்ச்சி!

(கொழும்பு)

கொழும்பு பங்குச் சந்தை விலைகள் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்துவருகின்றன. வடக்கு கிழக்கில் சமாதான நிலைமை அரசின் பிடியிலிருந்து நழுவிச் செல்வதால் இச்சரிவு ஏற்பட்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இம் மாதம் 2-ம் திகதி வெளிநாட்டுக் கொள்வனவு விற்பனையைவிட ரூபா 19 மில்லியனால் அதிகரித்து 36 மில்லியன் ரூபாவாக இருந்தது. மறுநாள் கொள்வனவு 97 மில்லியன் ரூபாவாகவும் விற்பனை 87 மில்லியன்ரூபாவாகவும்இருந்தது.

ஆயினும் இவ் இரண்டும்மீண்டும் 4-ம் திகதி வீழ்ச்சியுற்றன. தொடரும் நாட்களில் இது அதிக சரிவை எதிர்நோக்கலாம்.

இது இவ்வாறிருக்க வங்கித்துறை பங்குச்சந்தைமுடிவுகள் பெருத்த ஏமாற்றமளிப்பதாக ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளார். இத்துறையின் பங்குச் சந்தை எதிர்காலம் குறைத்து மதிப்பிடப்பட்டிருப்பதால், இப்பின்னடைவு ஏற்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் நாட்டின் சமாதானப் போக்கில்ஏற்பட்ட பின்னடைவால் மிக மோசமாகப் பாதிப்புற்றிருப்பது ஹோட்டல்துறை எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வீழ்ச்சிகள் யாவும் ஸ்ரீலங்காவில் ஒரு பொருளாதார மந்தநிலையை ஏற்படுத்த ஏதுவானவையாக அமையப்போகின்றன எனவும் அவர் விளக்கினார்.

பாரிஸில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உறுதியளிக்கப்பட்ட அமெரிக்க டொலர் 850 மில்லியன் தொகை நிதியை வரவேற்ற அவர் இதன் நன்மைகள் அதனை உண்மையாகப் பயன்படுத்தினால் மட்டுமே வெளிப்படும் எனவும் கூறினார்.

வெளிநாட்டு நிதிஉதவியைப் பயன்படுத்துவதில் நாட்டில் இதுவரை காலமும் ஒருவித அசமந்தப்போக்கே கடைப்பிடிக்கப்பட்டு வந்ததால் பாரிஸ் நிதி எந்த அளவுக்கு நன்மை தரப்போகின்றது என்ற விடயத்தில் பொருளாதார ஆய்வாளர்கள் பெருத்த எதிர்பார்ப்புடன் இல்லை எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. -தீ-சி-ரி

# வசந்தராஜா ராஜினாமா குறித்து ரூபவாஹினி ஊழியர்கள் கவலை

(கொழும்பு)

ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் பதவியிலிருந்து விலகிய திரு. வசந்தராஜா செய்தியாளர்களின் சுதந்திரத்திற்காக போராடி வந்ததுடன் செய்தியாளர்கள் மற்றும் ஊழியர்கள் சுதந்திரமாக செயற்பட பக்கபலமாக இருந்தவர் என்று ரூபவாஹினி செய்தியாளரான திருமதி. கமலினிசெல்வராஜன் உட்பட பல சிங்கள நிகழ்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

திரு. வசந்தராஜா ரூபவாஹினியின் தலைவராக பொறுப்பெடுத்தவுடன் பல மாற்றங்களைச் செய்து அதனை சர்வதேச ஒளிபரப்பு துறைக்கு நிகராக உருவாக்க வேண்டுமென ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார்.

விசேடமாக பி. பி, ஸி. உலகசேவைக்கு நிகராக ரூபவாஹினி ஒளிபரப்புகளையும் கொண்டுவர அவர் முயற்சி செய்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செய்திகளை நம்பகத்தன்மையுடன் மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் அவர் மிகக் கவனமாக செயற்பட்டு வந்தார்.

ரூபவாஹினி ஊழியர்கள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி சுதந்திரமாக செயற்படுவதிலும் அவர் பெரும் உதவியுடன் இருந்து வந்துள்ளதுடன் ஊழியர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு அச்சமின்றி முகம் கொடுத்தவர்.

திரு. வசந்தராஜா மீண்டும் ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவராக வரவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். -ரி

# "நாம் எல்லோரும் கம்பன் காட்டிய வழியை பின்பற்றி வாழவேண்டும்"

## கம்பன் விழாவில் உரை

(யாழ்ப்பாணம்)

காலத்தால் அழியாத பெரும் காப்பியத்தைக் கம்பன் எமக்கு வடித்துத் தந்துள்ளான். கம்பன் கருத்துக்கள் எமது மக்களால் என்றென்றும் பின்பற்றப்பட வேண்டியதொன்றாகும். கம்பராமாயணம் பற்றியோ அதன் சிறப்புக்கள் பற்றியோ இலங்கையிலும் சரி, இந்தியாவிலும் சரி அறியாதவர்கள் கிடையாது என்றே கூறலாம்.

அகில இலங்கை கம்பன்கழகம் நடத்தும் கம்பன் விழா இரண்டாம் நாள் காலை நிகழ்வில் கலந்துகொண்டு தலைமையுரை நிகழ்த்திய உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இரத்தினராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கம்பனைப் போன்ற சிறந்த கவிஞர்களின் கருத்துக்கள் எமது வாழ்க்கைக்கு மிக முக்கியமானதொன்றாக அமைகிறது. மகாபாரதம், கம்பராமாயணம் போன்ற நூல்கள் இதிகாச நூல்கள் இவை எமக்கு நல்ல கருத்துக்களைத் தந்துள்ளன. கம்பருடைய நூல்கள் எமது பாடசாலைகளில பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது கம்பனின் பாடல்கள் இல்லாத நூல்கள் எமது பாடசாலைகளில் கிடையாதுஎன்றே கூறவேண்டும்.

கம்பன் தனது காவியங்கள் மூலம் தமிழைச் சிறப்பாகவும் தெளிவாகவும் எமது மக்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடிய வகையில் வடித்துத்தந்துள்ளான். நாம் எல்லோரும் கம்பன் காட்டியவழியை பின்பற்றுபவர்களாக இருக்க வேண்டும். கம்பன் காட்டிய வழியை பின்பற்றுவதற்கு மக்கள் மத்தியில் எமது கலாசாரம் பேணப்படவேண்டும் நாம் எல்லோரும் பண்புள்ளவர்களாகவும், கலாசார ஆர்வம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றார்.

இறுதியாகப் பண்டிதர் சச்சிதானந்தனின் ஆய்வுரை இடம் பெற்றது. 162-ரி

# நிதி முகாமைத்துவ பயிற்சிநெறி ஆரம்பம்

(மானிப்பாய்)

அரசதிணைக்களங்களில்பணிபுரியும் எழுதுவினைஞர்கள், கணக்குப்பதிவாளர்கள் ஆகியோருக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிஉதவியுடன் அளிக்கப்படும் நிதி முகாமைத்துவப் பயிற்சி நெறி யாழ். தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரை மண்டபத்தில் கடந்த 9-ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எல். திலகநாயகம் போன்றவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

செவ்வாய் காலை 8 30 மணியளவில் அரம்பமான இப் பயிற்சி வகுப்பில் யாழ் செயலக ப்ரதம கணக்காளர் திரு. சி. சிவபாலன், திட்டப் பணிப்பாளர் கே. பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

இப்பயிற்சித் திட்டத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள சகல கணக்கியல லிகிதர்கள், கணக்குப் பதிவாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

15நாட்களுக்கு நடைபெறும் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் 30 பேர் வீதம் பயிற்சிபெறுவர்.

இப்பயிற்சித் திட்டத்தினை இலங்கை கணக்காளர் சங்க வடபகுதி கிளையினர் மேற்பார்வைசெய்து வருகின்றனர். 71-162

# நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா நோயாளர் நலன்புரி சங்கத்தின் ஆதரவில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை விரிவுரை மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை 14ம் திகதி காலை 10-00 மணிக்கு நடைபெறவுள்ளது. ரி

# மருந்து தட்டுப்பாடு

[கொழும்புத்துறை]

பருத்தித்துறைப் பகுதியில் ஏ. ஆர். வி. ஊசிக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விசர்நாய்க்கடி ஊசி மருந்துக்கு தற்போது பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதாக தெரிய வருகிறது. -154

## ★ அமெரிக்கா

# பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கினால் பதில் நடவடிக்கை

## இந்தியா எச்சரிக்கை

[புதுடில்லி]

பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்களை அமெரிக்கா வழங்குமானால் பதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்படும் என இந்திய வெளியுறவுத்துறை இணையமைச்சர் ஆர். எல் பாட்டியா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதம் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு தெரியும்.

அமெரிக்காவின் இந்நடவடிக்கை மூலம் இந்தியவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என அமெரிக்க அரசாங்கத்திற்கு வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். கரி

## ★ பாகிஸ்தானில்

# நிறைவேற்றப்படவிருந்த மரணதண்டனை ஒத்திவைப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலைக் குற்றவாளிக்கு நிறைவேற்றப்படவிருந்த மரண தண்டனையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலவரையறையின்றி ஒத்திப் போட்டுள்ளனர்.

இவருக்கு வழங்கப்பட்ட தண்டனையும் அது நிறைவேற்றப் படவேண்டிய முறையும் இஸ்லாமிய சட்டப்படி முடிவு செய்யப்பட்டன.

1992 ம் ஆண்டு பிரஸ்தாப நபர் இளம் பெண் ஒருத்தியை கொலை செய்ததாக குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மக்கள் முன்னிலையில் தண்டனை நிறைவேற்றப் படவேண்டும் என்றும் கொலையுண்ட பெண்ணின் பெற்றோரே தண்டனையை நிறைவேற்றவேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

ஆனால் தற்போது இத் தண்டனை நிறைவேற்றப் படக் கூடாது என்பதில் பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதியாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (க - ரி)

## குமரி அனந்தனும் தொண்டர்களும்

# கைதாகி விடுதலை

(சென்னை)

குமரி அனந்தனும் அவரின் தொண்டர்களும் நேற்று முன்தினம் வீதி மறியல் போராட்டம் நடாத்தியபோது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

விடுதலை வீரர் நாகேஸ்வராவின் வீட்டை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு வேண்டியவர்கள் சிலர் உடைத்து அதே இடத்தில் புதிய கட்டிடம் ஒன்றை அமைக்க முயற்சிகள் மேற்கொண்டதை எதிர்த்தே திரு. குமரி அனந்தன் மேற்படி போராட்டத்தை நடாத்தினார்.

கைது செய்யப்பட்ட திரு. குமரி அனந்தனும் தொண்டர்களும் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். வி ச ரி

## ஜம்மு காஷ்மீரில்

# பள்ளிவாசலுக்கு தீவைப்பு ஆயிரம் வீடுகளும் சேதம்

(சிறீநகர்)

ஜம்முகாஷ்மீர் பள்ளத்தாக்கில் ஹராயே ஷெரிக்நூர்தீன் வலி புனித பள்ளிவாசல் மற்றும் அதனையொட்டிய மசூதிக்கும் தீயசக்திகள் தீவைதது விட்டார்கள் என இந்திய வானொலி அறிவித்துள்ளது.

மசூதிகள் தீவைக்கப்பட்டதுடன் அதனையொட்டியிருந்த ஆயிரம் வீடுகளும் கொளுத்தப்பட்டுள்ளன.

தீ அணைப்பதற்காக நிறுத்தப்பட்டிருந்த 6 தீயணைப்பு வண்டிகளைநோக்கி தீவிரவாதிகள் சுட்டதாகவும் அரச அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை 2-30மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

புனித தலத்துக்கும் வழி நெடுகிலுமே அந்த தீவிரவாதிகள் வெடிக்கும் கருவிகளையும் புதைத்து சென்றுள்ளார்களாம். இதனையடுத்து அங்கு கலவரம் வெடிக்கலாம் என அஞ்சப்பட்டு சிறீநகர் உட்பட பலபகுதியிலும் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டுள்ளது கே.சி-ரி

## ஆபிரிக்காவில் மர்ம நோயினால்

# 100 பேர் உயிரிழப்பு

(ஹின்சாசோ)

ஆபிரிக்காவில் - சயர் நாட்டில் ஒரு மர்மமான வைரஸ் தொற்று நோய் ஏற்பட்டதில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

சயர் நாட்டு தலைநகருக்கு 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிராமத்திலேயே இந்த நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்ததொற்றுநோய் பலரை உயிரிழக்கச் செய்யும் காரணத்தினால் உலக சுகாதார நிறுவனம் மேற்குலக நாட்டு வைத்தியநிபுணர்களை அங்குஅனுப்பி வைத்துள்ளது.

இந்நோய் தொற்றியதும் காய்ச்சல், சத்தி, மயக்கம் ஏற்பட்டுவிடுகிறது, இதற்கான மருந்துஎதுவும் இன்னும்கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் நோய் தொற்றியவர் மரணத்தை தழுவ நேரிடுகிறது.

நோய் தொற்றியவரை தனியாக வைத்து பராமரிப்பது, இறந்தோரை ஏனையோர் அணுகவிடாமல் தடுத்து புதைத்தல் வேலைகளைச் செய்வதிலும் உலக சுகாதார நிறுவனம் கவனம் செலுத்துகிறது. -கே-ரி

யாழ்ப்பாணம்
நல்லூர்

## படைமுகாம்கள் சுற்றிவளைப்பு
# தெற்கில் கொந்தளிப்பு

(கொழும்பு)

வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து பாதுகாப்பு அரண்களை அமைத்து வருவதாக வெளிவரும் செய்திகளினால், கொழும்பில் ஒருவித உணர்ச்சிக்கொந்தளிப்புச் சூழ்நிலை உருவாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக பூநகரி, பலாலி இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் எந்தநேரத்திலும் தாக்கலாம் என்ற இனவாத அடிப்படையில் கொழும்பில் வெளியாகும் பலசிங்களப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுவருகின்றன. இதனால் வடபகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களில் கடமையாற்றும் இராணுவத்தினரின் குடும்பத்தினர் மத்தியில் ஒருவித பதட்டம் காணப்படுவதாகவும் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

-வி-சி-ரி

## கிராம சேவகர்கள் 19 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் பணிபுரிவதற்கு பத்தொன்பது கிராம உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அண்மையில் இவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட பிரிவுகளில் விரைவில் தமது பணிகளை ஆரம்பிப்பார்களென யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்தார். 162-சி

## புயல்காற்றினால்
# பாடசாலை இடிந்து வீழ்ந்தது
## அதிபர் 12 மாணவர் காயம்

(கொழும்பு)

ஆனை மடுவ பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் வீசிய புயல் காற்றினால் பாடசாலை ஒன்று இடிந்து வீழ்ந்ததுடன் அப் பாடசாலை அதிபர் உட்பட 12 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

ஆனைமடுவ கமநலக்குளம் கனிஷ்ட பாடசாலைக் கட்டடமே இந்தப் புயல் காற்றினால் இடிந்து வீழ்ந்தது. இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் புத்தளம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ரி

## மே 15ம் தேதி
# இந்து இளைஞர் பேரவை
# கொடித்தினம்

[கொழும்புத்துறை]

யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த கொடித்தின வைபவம் இம்மாதம் 15 ம் திகதி திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவையின் தலைவர் திரு. வே.கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

இந்நிகழ்வில் சகல இந்து இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளையும், பாடசாலைகள் இந்துமன்றங்களின் பிரதிநிதிகளையும், ஏனைய சமய நிறுவனங்களின் உறுப்பினர்களையும் பங்குபற்றுமாறுவேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

-154

## யாழ். போதனா
# வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டருக்கு தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நோயாளர்களை ஏற்றிவந்த சீ-டான்சர் கப்பலில் ஒட்சிசன் சிலிண்டர் எதுவும் எடுத்துவரப்படவில்லை.

தற்சமயம் வைத்திசாலையில் கையிருப்பில் இருக்கும் ஒட்சிசன் சிலிண்டர்கள் முடியும் தறுவாயில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. -170-ரி

## ஜவகர்லால் நேரு விருது

(புதுடில்லி)

உலக அமைதிக்காக இந்திய வருடாந்தம் வழங்கும் மிக உயர்ந்த விருதான ''ஜவர்கலால் நேரு விருது'' பர்மாவில் கடந்த ஆறு ஆண்டுகளாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுசிக்கு வழங்கப்படுமென்று இந்தியா அறிவித்துள்ளது.

நோபல பரிசு பெற்ற சுசியின் தைரியமான அகிம்சை வழியை தாம் பாராட்டுவதாக இந்தியா அறிவித்துள்ளது. (வி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி கிழக்கு காதவாய்க்கால் விநாயகர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் 8ம் நாள் உற்சவ நிகழ்வில் 'இலக்கியத்தில் சமயம்' என்னும் பொருளில் கவிஞர் சி. சதாசிவம் சொற்பொழிவாற்றவுள்ளார்,

சிவஸ்ரீ தி: கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. -ரி

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினர் தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 12 ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் திரு. வி. யோகராசா வழங்கும் 'திருமுருகன் திருவிளையாடல்' வில்லிசை இடம்பெறும். அறிமுகவுரையை திரு. சி. சிவலோகம் நிகழ்த்துவார். -ர

0 0 0 0

(ஆனைப்பந்தி)

காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 12 ம்திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயஅதிபர் திருமதி தே. பாலசிங்கம் தலைமையில், யாழ் மரியாள் வித்தியாலய [ஓ. எல். ஆர்.] மைதானத்தில் நடைபெறும். -101

0 0 0

[யாழ்ப்பாணம்)

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தில் இன்று 12 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில்ஆரம்ப பிரிவிற்கும் வாழ்க்கைத்திறன் பாடத்திற்குமான கல்விக் கண்காட்சியும், ஆரம்பபிரிவுமாணவருக்கான மாதிரிவகுப்பறைத் திறப்புவிழாவும் நடைபெறும்.

## நடமாடும் கால் நடை வைத்திய சேவை

[கொழும்புத்துறை]

வட்டுக்கோட்டைகால்நடை வைத்திய அதிகாரி தமது பகுதியிலுள்ள சகல கிராம அலுவலர் பகுதிகளிலும் ஒவ்வொரு மையத்திலும் மாதாந்தம் ஒருநாள் அல்லது இரண்டு நாட்களுக்கு உத்தியோகத்தர்களுடன் நேரில் சென்றுசேவையாற்ற நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார்.

இக்கால்நடை வைத்திய நடமாடும் சேவையின் கீழ் முதலாவது மையம் விரைவில் யாழ். அராலி மத்தி கிராம சேவை அலுவலர் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

## வேலணைப் பாடசாலையின் 2 கொட்டகைகள் ஒழுக்கு

(ஆனைப்பந்தி)

யாழ்- அரசடி பகுதியில் இயங்கி வரும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஏழு வகுப்புகள் உள்ளஇரண்டு கொட்டகைகள் ஒழுக்கு நிறைந்து காணப்படுவதால மழை நாட்களில் இவற்றில் வகுப்புக்கள் நடாத்த முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது;

இதே போன்ற நிலை புங்குடுதீவு மகாவித்தியாலயத்திலும் காணப்படுகின்றது இங்கு இரண்டு வகுப்புகளின் நான்கு தொகுதிகள் மற்றும் விஞ்ஞான ஆய்வு கூடம் என்பன உள்ள கொட்டகை ஒழுக்கு நிறைந்துள்ளதனால பெரும் சிரமங்கள் எதிர்நோக்கபபடுவதாக வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. 101-ரி

## இராசி பலன்

12-05-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை-29)

துவாதசி மு.ப. 8-41வரை, அத்தம் பி ப 12-26 வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் காலை 10-24 முதல் 11-54 வரை, சுபவேளை காலை 5-54 முதல் 7-24 வரை.

மேஷம்: உறவினர் ஆசி, பணவரவு, கல்வியில் சிறப்பு,

இடபம்: வீண் தொல்லை, தொழில் பாதிப்பு, அலைச்சல்.

மிதுனம்: கடன் படல். உடல் அசதி, குடும்ப கவலை,

கடகம்: நண்பர் வரவு, மன நிறைவு, கடமை உணர்வு.

சிங்கம்: தனிமை உணர்வு, விதண்டாவாதம், சினமடைதல்.

கன்னி: சுபகாரியம், சகோதர பெருமை, தெய்வீக சிந்தனை.

துலாம்: அமைதிக் குறைவு. பழைய நினைவுகள், பிதா வெறுப்பு.

விருச்சிகம்; தொழில் உறவு, பணப்புழக்கம், மனமகிழ்ச்சி.

தனுசு: நினைத்ததை சாதித்தல், குடும்ப சுகம், மனமாற்றம்.

மகரம்: பழிவாங்கப்படல், பெண்பகை, அகால உணவு.

கும்பம் : காரிய தடை, குடும்ப பிரிவு, அவசர முடிவு.

மீனம்: அதிகாரிகள் பாராட்டு, வாதத் திறமை அதிகாரச் சிறப்பு.

— ஜோஸ்யர்.

## தபாலகத்தில் பொதியிடும் விபரங்களுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் தபால்களை பொதியிடும் பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபாலதிபர் திரு சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து கப்பலில் கடந்த இரண்டு மாதங்களாக தபால்கள் எதுவும் வந்து சேராததினால் தபால்களை பொதியிட்டு அனுப்பும் பைகள் தபாலகத்தில் முடிந்துள்ளன.

தற்சமயம் 'லங்கா முடிதா' கப்பலில் 473 தபால் பொதிகள் வந்து சேர்ந்திருப்பதாகவும், இவை யாழ் பிரதம தபாலகத்திற்கு வந்து சேர்ந்ததும் தபால்களை பொதியிடும் பைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு ஓரளவு நிவர்த்தி செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(170 ரி)

## கலைத்திறன் போட்டி

(கொழும்புத்துறை)

தென்மராட்சி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகள் யாவும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி வித்தியாலயத்தில் நடைபெற்றது. 154

## கிழக்கு பல்கலை 23ம் திகதி திறக்கப்படும்

(மட்டக்களப்பு

கிழக்குப் பல்கலைக்கழகம் இரண்டாம் தவணைக்காக எதிர்வரும் 16ம் திகதி திறக்கப்படுமென்று பிரதி உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால மட்டக்களப்பு மாவட்ட எம். பி. திரு. ஜோசப் பரராஜசிங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

23ம் திகதி பல்கலைக்கழகம் திறக்கப்படமாட்டாது என்று செய்திகள் வெளியானதையடுத்தே பிரதி உயர்கல்வி அமைச்சர் இவ்வாறு அறிவித்துள்ளார். ர-சி

## அராலி மக்கள் பீதி

(வட்டுக்கோட்டை)

மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறையில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் இரவு வேளைகளில் ஷெல் தாக்குதல்களை நடத்துகின்றனர் இதனால் அராலிப் பகுதியில் உள்ள மக்களின் நாளாந்த வாழ்க்கை பெரும் பீதிக்கு மத்தியில் அமைகின்றது.

இங்கு ஏவப்படும் ஷெல்கள் இதுவரை அராலியூரின் கரையோரப் பகுதிகள் வயல்வெளிகள் பற்றைக்காட்டுப் பிரதேசங்கள் போன்றவற்றில் வீழ்ந்து வெடிப்பதனால் பாரிய சேதங்கள்ஏற்படவில்லை. 139சி

## கலந்துரையாடல் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் நல்லூர்க் கல்விக்கோட்டங்களின் மாணவர் எழுச்சி நாள் செயற்பாட்டுக் குழுவினர் மாணவர் அமைப்பின் பாடசாலைப் பொறுப்பாசிரியர்கள் மாணவப் பொறுப்பாளர்கள் ஆகியோரை கலந்துகொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புக் கேட்டுள்ளது. ரி

## மலையகத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் மாத்திரமே அவர்களைத் தடுத்து வைப்பதற்கான ஆதாரமாக இருக்கக் கூடாது. என நான் வலியுறுத்தியுள்ளேன் என்றும் கூறினார். ரி

## வெளிநாடுகளில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அபிவிருத்தி என்ற போர்வையில் பெறும்நிதிகள்வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு பாவிக்கப்பட இருப்பதாக விடுதலைப் புலிகள் தீவிரமாக வெளிநாடுகளில் பிரசாரத்தை மேற்கொள்கிறார்கள் என்றும் 'சிலுமின' மேலும் தெரிவித்துள்ளது.

-ம-சி

## விபரங்கள் திரட்டப்படுகிறது

(கொழும்புத்துறை)

வலிகாமம மேற்கு பிரதேச சபை அலுவலகத்தினால் தற்போது கல்வி கற்பதற்குரிய வயதை அடைந்த பின்பும் பாடசாலைகளுக்குச் செல்லாமல்இருக்கின்ற சிறுர்கள் பற்றிய சகல விபரங்களும் திரட்டப் பட்டு வருகிறது.

இப் பகுதியில் ஐந்து வயது பூர்த்தியடைந்த பின்னரும் கூடப் பாடசாலைகளுக்குச் செல்லாமல் இருக்கின்றவர்களின் முழுமையான விபரங்களையும் அவ்வாறு அவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் இருப்பதற்குரிய காரணங்களையும் சேகரித்துத்தருமாறு வலிகாமம்- மேற்கு பிரதேச சபையின் செயலாளர் அப்பகுதிக் கிராம சேவை அலுவலர்களைக் கோரியுள்ளார். 15ர

## தராசு படிகளுக்கு முத்திரையிடுதல்

[கொழும்புத் துறை]

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு செயலகத்தில் நிறுவைகள் - அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரை இடப்படும் பணி நடைபெற உள்ளது.

இன்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8. 30 மணி முதல் பிற்பகல் 2. 30 மணிவரை நிறுவைகள் - அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரை இடும் பணி மேற்கொள்ளப்படும். -154 ரி

## கோமாரியிலும் தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிவரும் 'கோமாரி' கப்பலிலும் வெளியூர் தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ் பிரதம தபாலதிபர் நேற்று மாலை தெரிவித்தார். (இ-170)

## பேச்சுக்களில் கலந்து கொள்ளுமாறு திலகரிடம் அமெ. கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரசனைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தீர்வு காண்பதற்கு மீண்டும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளுமாறு அமெரிக்கா விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்காவின் ஆசியாவுக்கான உதவி ராஜாங்க அமைச்சர் திமோதிக்கானே வாஷிங்டனில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோறன்ஸ் திலகர் சந்தித்தபோது மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. வி இ

## லங்கா முடித்தவில் வந்த தபால்கள் இன்று விநியோகம்

[யாழ்ப்பாணம்]

'லங்கா முடித்த' கப்பலில் வந்து சேர்ந்த 473 தபால் பொதிகளும் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு யாழ் பிரதம தபாலகத்திற்கு நேற்று வியாழன் மாலை எடுத்துவரப்பட்டது

தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை முதல் விநியோகிக்கப்படுமென யாழ் பிரதம தபாலதிபர் திரு சு கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் வந்து சேர்ந்த தபால்கள் ஏப்ரல் மாதம் 18ம், 19ம் திகதியிடப்பட்டவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். [இ-170]

## நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பல் சேவைக்கு ஒப்பந்தத்தின்படி பயணம் ஒன்றக்கு ரூபா 75,000/- செலுத்த வேண்டும். 150 பயணிகளுக்கு மேலாக பலர் இந்த சேவையைப் பயன்படுத்த விரும்பியபொழுதிலும் முன்னுரிமைப் பட்டியலில் 150 பேருக்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தில் அனுமதி பெறப்பட்டிருந்தது.

ஆனல் அவர்களும் செல்லாது. ஏனையோரையும் பயணம் செய்யவிடாத நிலைமை ஏற்படும் காரணத்தால் ஒப்பந்த மீறலும், பயணம் செய்யாதவர்களுக்கு இடைஞ்சலும் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த சேவையைத் தொடர்ந்து நடாத்தும் நோக்கத்துடன் முற்பணக் கட்டணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டும். நரோமா கப்பலில் செல்வதற்குப் பதிய விரும்புவோர் இனிமேல் தங்கள் விண்ணப்பத்தில் முற்பணம் மீளப் பெறமாட்டோம் என்ற உறுதியை அளித்தல் வேண்டும் என யாழ் அரச அதிபர் அறிவித்துள்ளார். இ

## காஷ்மீரில் இந்திய ராணுவம் தாக்குதல்
### 30 போராளிகள் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ஜம்மு- காஷ்மீர் பகுதியில் ஹராயே ஷெலிச்நூர்தீன் பள்ளிவாசல் தீவைப்பு தொடர்பாக முஸ்லிம் போராளிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் 30 போராளிகள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு பகுதியினருக்குமிடையில் நீண்ட நேரமாக துப்பாக்கிச் சமர் இடம் பெற்றதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன.

சம்பவம் குறித்துபாகிஸ்தான் தனது பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் பிரதமர் பி. வி நரசிம்மராவ் நடைபெற்ற சம்பவங்களையடுத்து மாநிலங்கள் அரசுகளின் பசுதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீர் பிரதேசத்தின் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. க-இ

## உணவுப் பொருட்கள் இறக்கப்படுகின்றன

(யாழ்பபாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் லங்காமுடிதத கப்பலில் இருந்து உணவுப்பொருள்கள் இறக்கும் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகிறது.

இக்கப்பலில் வந்த உணவுப் பொருட்களில் சிலவற்றை இராணுவததினர் காங்கேசன் துறையில் வைதது எடுத்துள்ளனர். 170 இ

## இன்றைய
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறைவின்றி அரசு தெளிவாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கவும் வேண்டும்.

இப்போதைய நிலையில் இராணுவம் விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளும் நிலைமையில் இருக்கின்றதா என்பதை அறிய மக்களுக்கு உரிமையுண்டு என்றும் கூறினர்.

## யாழ் பல்கலைக்கழக
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கழக அனுமதிக்கான வெட்டுப புள்ளியில் மாற்றம் செய்வதன் அவசியம் பற்றிப் பரிசீலனை செய்வதற்கும் ஜனுதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். -க இ

## வடக்குகிழக்குப்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன.

வடக்கு-கிழக்கு முகாம்களுடனன விமான தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் புலிகளுக்கு எதிராக எவ்வாறு போராடுவது என்பது குறித்து பல நிபுணத்துவயோசனைகளை சிறிலங்கா அரசு வெளிநாடுகளிடமிருந்து எதிர்பார்த்துள்ளது. (ம-ரி இ)

## புளியங்குளம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி - 13

★ றிப்பிட்டர்துப்பாக்கி -02
★ ஷொட்கன்கள் - 03
★ ரி-81 எல். எம். ஜி. ரம் ரவைக்கூடுகள் - 04
★ ஏ. கே. எல். எம். ஜி. ரம் ரவைக்கூடுகள் - 13
★ ஏ. கே. ரவைக் கூடுகள் - 62
★ ஏ. கே. எல். எம். ஜி, தொடர் ரவைகள் 1258
★ ஆர். பி. ஜி. எறிகணைகள் - 08
★ ஆர். பி. ஜி. புரொப்ளர்கள் - 07
★ ஆர்.பி.ஜி. ஸ்கோப் -01
★ 60 மில்லி மீற்றர் எறிகணைகள் - 14
★ 40 மில்லி மீற்றர் எறிகணைகள் - 77
★ நடுத்தர ரவைகள் 8551
★ 5.55 ரவைகள் - 150
★ 5 56 ரக பயிற்சி ரவைகள் - 30
★ நேட்டோ ரவைகள் - 22
★ 3 03 ரவைகள் - 09
★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
★ தொலைத் தொடர்பு சாதனகுறேஸ்க் வாக்கி01
★ வோக்கி பவர்பாக் - 02
★ பிஸ்டல்தாங்கிஅணி -01
★ ஏ- கே. தாங்கி அணிகள்14
★ ஏ. கே. எல். எம். ஜி. தாங்கி அணிகள் - 02
★ 40 மில்லி மீற்றர் துப்பாக்கிதாங்கி அணிகள்- 13
★ 60 மில்லி மீற்றர் மோட்டர் துப்பரவாக்கி - 01
★ 60 மில்லி மீற்றர் குறிநிலை காட்டி - 01
★ 60 மில்லி மீற்றர்மையல் வலை நீக்கி சாதனம் - 01
★ 60 மில்லி மீற்றர் சாவித் தொகுதி - 01
★ 60 மில்லி மீற்றர் சிறிய கத்தி - 01
★ 60 மில்லி மீற்றர் தூக்குக் குண்டு - 01
★ 60 மில்லி மீற்றர் றயின் ரின் - 01
★ கைக்குண்டுகள் - 18
★ ரி 56 துப்பரவாக்கி தொகுதிகள் - 03
★ இராணுவ தலைக் கவசங்கள் - 15
★ புகைப்படக் கருவி - 01
★ தண்ணீர் கான்கள் -16
★ தண்ணீர் கான் தாங்கிகள் - 11
★ இராணுவப் பைகள் -11
★ மழைக் கவசங்கள் - 14
★ கம்பி றோல் 1 அந்
★ போக்கஸ்விளக்குகள் 06
★ பொலிஸ் சீருடைகள் -49
★ பொலிஸ் சீருடை முழு நீளக் காற்சட்டை -39
★ காலணிகள் -06
★ சாதாரண பைகள் - 07
★ இராணுவ சப்பாத்துகள் - 16
★ பொலிஸ் சப்பாத்துகள் - 32
★ 100 அம்பியர் மின்கலம் - 01
★ 60 மில்லி மீற்றர் பற்றறி போடும் ஏபோட் லைற்01
★ ஏ போட்மின் குமிழ்கள் - 11
★ 60 மில்லி மீற்றர்மோட்டர் உதிரிப்பாகம்தாங்கி அணிகள் - 02
★ பொலிஸ் தொப்பிகள் - 20
★ பொலிஸ் உடுப்பு பெட்டிகள் - 21
★ இராணுவ இடுப்புப் பட்டிகள் - 15
★ வானொலிப்பெட்டி -01

ஆகியவை விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. க

## பாண், மா உரமானியங்களை நிறுத்துமாறு ஆலோசனை

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாண், மா, உரவகைகள் போன்றவற்றிற்கான மானியங்களை நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளதென 'லங்காதீப' தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் பாரிசில் இடம்பெற்ற உலக வங்கியின் நிதி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தைச் சேர்ந்த வி. அன்ரொலி மேற்படி யோசனையை இலங்கை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

இலங்கையில் வறுமையைப் போக்குவதற்கு இலங்கை அரசால் அறிமுகடாயிருக்கும் மேற்படி நிவாரணங்களை நிறுத்துவதற்கு இலங்கை அரசு ஒத்துக்கொண்டிருப்பதாக 'லங்காதீப' மேலும் தெரிவித்தது. -ம-ரி

## அம்பத்தளை குடிநீர் விநியோக நீர்சுத்திகரிப்பு தாங்கியில் மனித சடலம் கண்டெடுப்பு

[கொழும்பு]

கொழும்பு நகருக்கு குடிநீர் விநியோகிக்கும் அம்பத்தளை நீர் சுத்திகரிப்புத் தாங்கியில் மனித சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்ததாவது:

சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை தேக்கி வைக்கும் நிலத்துக்கடியில் உள்ள தாங்கி ஒன்றில் மனித சடலம் ஒன்று மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே நீர் அகற்றப்பட்டு தாங்கியிலிருந்து நீர் விநியோகம் தடுக்கப்பட்டது. மீண்டும் கிருமிநாசினியால் சுத்திகரிக்கப்பட்ட பின்பே பொதுமக்களின் பாவனைக்கு அது விடப்பட்டது,

அப்புத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தினமும் 90 லட்சம் கலன் நீர் கொழும்பு மக்களின் பாவனைக்கு விடப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வி-இ

## பொலிஸார் படுகொலை செய்த சீக்கிய போராளிகளுக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

(புதுடில்லி)

சீக்கியப் போராளிகள்என்ற சந்தேகத்தில் பொலிசாரால் படுகொலை செய்யப்பட்ட சீக்கியருக்கு நஷ்டஈடாக 11லட்சம் ரூபாவை பொலிஸ் இலாகா செலுத்தவேண்டுமென்று இந்திய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பஞ்சாப்மாநிலத்தில் கடந்த ஆண்டு போராளிகள் என்ற சந்தேகத்தில் ஏழு சீக்கியர்களை பொலிசார் கடத்திச் சென்று படுகொலை செய்தது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில், பொலிசாரினல் கொலைசெய்யப்பட்ட ஒவ்வொரு சீக்கியருக்கும் நஷ்டஈடாக தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை பொலிஸ் இலாகா வழங்க வேண்டும் என்று மூன்று நீதிபதிகள் கொண்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. வி-இ

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

வன்னியில கடந்த 9ம் திகதி இலங்கை விமானப் படையினர் மேற்கொண்ட விமான தாக்குதலின்போது மேஜர் விமலன் அல்லது விமல் என்ற விடுதலைபுலிஇயக்கப்போராளி வீரச் சாவடைந்தார்.

இதேவேளையில் கடந்த திங்கள் மட்டக்களப்பில படையினருடனன நேரடி மோதலில் 2ம் லெப். சொரூபன் அல்லது சிவலிங்கம் சிவதாஸ் என்பவர் வீரச் சாவடைந்தார்.

★

வவுனியா காட்டுப் புளியங்குளம் இராணுவ பொலிஸ் கூட்டுமுகாம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை புவனேந்திரன் பகிரதன் (கிளிநொச்சி-உருத்திரபுரம்) என்பவர் வீரச் சாவடைந்தார். க-இ

## பொலிசாரால்
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படும் விடயத்தில் இடைத்தரகர்கள் செயற்படுவது பற்றியும் பொலிஸ் நிலையங்களில் தமிழ் இளைஞர்கள் அவமானப்படுத்தப்படுவது குறித்தும் தாம் கவனமெடுப்பதாகவும் ஜனுதிபதி தெரிவிததுள்ளாராம்.

### கிளாலிப்பாதை

கிளாலிப்பாதையை பொது மக்களின் போக்குவரத்திற்கு மூடுவதென அரசாங்கம் முடிவு எதுவும் எடுக்கவில்லையென்றும் ஜனுதிபதி தெரிவித்தார்.

எனினும் கிளாலிப் பாதையை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதில் சில பிரச்னைகள் இருப்பதாகவும் இதுபற்றி தாம் கவனத்தில் கொள்வதாகவும் ஜனுதிபதி தெரிவிந்தார்.

கடல்வலய தடைச்சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் ஜனுதிபதி உறுதியளித்தார். -க-இ

## தனிநபர் ஆணைக்குழு

(கொழும்பு)

விமான சேவையில் நடைபெறும் மோசடிகள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் போன்றவற்றை விசாரிக்க தனிநபர் ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளதாக சுற்றுலாத் துறை, மற்றும் விமான சேவைகள் அமைப்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். இ-க

## இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் மட்டுப்படுத்தபட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமை அலுவலகம் நேற்று தெரிவித்தது. க-இ

## ஆஸி அமைச்சர் இலங்கை வருகை

(கொழும்பு)

அவுஸ்திரேலியா நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரஸ் ஒரு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 22-ம் திகதி இலங்கைக்கு வருகின்ருர்,

இவர் ஜனுதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் ஆகியோருடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடாத்துவார் -வி-இ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B 1633613.